KPR IAS Academy
Institute for IAS, IPS, IFS and TNPSC Exams
Learn Beyond
No. 5, AKS Nagar, Near Gandhi Park, Coimbatore - 641 001





சென்னை ஆளுநர் மாளிகையில் நேற்று நடைபெற்ற நிகழ்வில் அமைச்சர்கள் வன்னியரசு, ஷாஜகான் ஆகியோருக்கு ஆளுநர் அர்லேகர் பதவிப் பிரமாணம் செய்து வைத்தார். அருகில் முதல்வர் விஜய்.

### தமிழக அமைச்சரவை மீண்டும் விரிவாக்கம்

# விசிக, முஸ்லிம் லீக் அமைச்சர்கள் பதவியேற்பு

**வன்னியரசுக்கு சமூக நீதி, ஷாஜகானுக்கு சிறுபான்மையினர் நலம்**

சென்னை

முதல்வர் விஜய் தலைமையிலான அமைச்சரவை 2-வது முறையாக நேற்றுவிரிவாக்கம்செய்யப்பட்டுள்ளது. விசிகவின் வன்னியரசு, இந்திய யூனியன் முஸ்லிம் லீக் (ஐயூஎம்எல்) கட்சியின் ஷாஜகான் ஆகிய இருவரும் அமைச்சர்களாகப் பதவியேற்றுக் கொண்டனர். அவர்களுக்கு ஆளுநர் அர்லேகர் பதவிப் பிரமாணம் செய்து வைத்தார். வன்னியரசுக்கு சமூக நீதித் துறையும், ஷாஜகானுக்கு வக்பு வாரியம், சிறுபான்மையினர் நலத் துறையும் ஒதுக்கப்பட்டுள்ளது.

தமிழக சட்டப்பேரவைத் தேர்தலில் 108 இடங்களில் வெற்றி பெற்ற தவெக ஆட்சியைப் பிடித்துள்ளது. ஆட்சியமைக்க 118 இடங்கள் தேவைப்பட்ட நிலையில், காங்கிரஸ், இந்திய கம்யூனிஸ்ட், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட், விடுதலைச் சிறுத்தைகள், இந்திய யூனியன் முஸ்லிம் லீக் (ஐயூஎம்எல்) ஆகிய கட்சிகளின் ஆதரவுடன் ஆட்சி அமைக்கப்பட்டது.

முதல்வராக தவெக தலைவர் விஜய் கடந்த 10-ம் தேதி பொறுப்பேற்றார். அவருடன், ஆனந்த், ஆதவ் அர்ஜுனா, செங்கோட்டையன் உள்ளிட்ட 9 பேர் அமைச்சர்களாகப் பொறுப்பேற்றனர். அவர்களுக்கான இலாகாக்கள் சமீபத்தில் ஒதுக்கப்பட்டன. இதன் பிறகு, காங்கிரஸ் கட்சி சார்பில் ராஜேஷ் குமார், விஸ்வநாதன் ஆகிய இருவர் அமைச்சரவையில் இடம் பெறுவதாக அறிவிக்கப்பட்டது.

ஆதரவு அளித்த மற்ற கட்சிகளும் அமைச்சரவையில் இணையுமாறு தவெக சார்பில் அழைப்பு விடுக்கப்பட்டது. விசிக, ஐயூஎம்எல் இந்த அழைப்பை ஏற்ற நிலையில், அமைச்சரவையில் பங்கேற்கப் போவதில்லை என்று கம்யூனிஸ்ட் கட்சிகள் தெரிவித்தன.

இந்த நிலையில், அமைச்சரவை நேற்று முன்தினம் (21-ம் தேதி) விரிவாக்கம் செய்யப்பட்டது. காங்கிரஸின் 2 எம்எல்ஏக்கள், தவெகவின் 21 எம்எல்ஏக்கள் என 23 பேர் அமைச்சர்களாகப் பதவியேற்றனர். அவர்களுக்கு ஆளுநர் அர்லேகர் பதவிப் பிரமாணம் செய்து வைத்தார். அமைச்சர்களுக்கான இலாகாக்களும் அறிவிக்கப்பட்டன.

இந்நிலையில், முதல்வரின் அழைப்பை ஏற்று, விசிக சார்பில் அக்கட்சியின் துணை பொதுச் செயலாளரும், திண்டிவனம் எம்எல்ஏவுமான வன்னியரசு அமைச்சரவையில் இடம்பெறுவார் என்று கட்சித் தலைவர் திருமாவளவன் அறிவித்தார். ஐயூஎம்எல் சார்பில் பாபநாசம் எம்எல்ஏ ஷாஜகான் அமைச்சரவையில் இடம் பெறுவதாக அறிவிக்கப்பட்டது.

ஆளுநர் மாளிகையில் நேற்று காலை 10 மணிக்கு நடைபெற்ற நிகழ்வில், முதல்வர் விஜய் முன்னிலையில், வன்னியரசு, ஷாஜகான் ஆகிய 2 பேரும் அமைச்சர்களாகப் பதவியேற்றுக் கொண்டனர். அவர்களுக்கு ஆளுநர் அர்லேகர் பதவிப் பிரமாணம் செய்து வைத்தார். இந்த நிகழ்வில் விசிக தலைவர் திருமாவளவன், ஐயூஎம்எல் தலைவர் காதர் மொகிதீன், அமைச்சர்கள், அதிகாரிகள் பங்கேற்றனர்.

முதல்வர் விஜய் தலைமையிலான அமைச்சரவை பதவியேற்பு விழா (மே 10), முதலாவது விரிவாக்கம் (மே 21) போலவே நேற்று நடைபெற்ற பதவியேற்பு விழாவிலும் வந்தேமாதரம், தேசிய கீதத்தை தொடர்ந்து, தமிழ்த்தாய் வாழ்த்து பாடப்பட்டது சர்ச்சையை ஏற்படுத்தியது.

இதற்கிடையே, புதிய அமைச்சர்கள் 2 பேருக்கும் இலாகாக்கள் ஒதுக்கீடு தொடர்பான அறிவிப்பை ஆளுநர் மாளிகை வெளியிட்டுள்ளது.

அதன்படி, வன்னியரசுக்கு சமூக நீதித் துறையும், ஷாஜகானுக்கு வக்பு வாரியம், சிறுபான்மையினர் நலத் துறையும் ஒதுக்கப்பட்டுள்ளது. ஏற்கெனவே இருந்த ஆதிதிராவிடர், மலைப் பழங்குடியினர் துறை தற்போது சமூக நீதித் துறையாக மாற்றப்பட்டுள்ளது.

விசிக, ஐயூஎம்எல் உறுப்பினர்கள் முதல்முறையாக அமைச்சர் ஆகியுள்ளதால், அக்கட்சியினர் உற்சாகம் அடைந்துள்ளனர்.

**அமைச்சரவையில் 35 பேர்**

எம்எல்ஏக்களின் எண்ணிக்கையில் அதிகபட்சம் 15 சதவீதம் வரை அமைச்சர்கள் இருக்கலாம். தமிழகத்தில் 234 எம்எல்ஏக்கள் உள்ள நிலையில், அமைச்சரவையில் அதிகபட்சம் 35 அமைச்சர்கள் இடம்பெறலாம். நேற்று 2 பேர் இணைந்த நிலையில், முதல்வர் விஜய் உட்பட தமிழக அமைச்சரவை 35 என்ற முழு எண்ணிக்கையை எட்டியுள்ளது.

---

### பிரதமர், மத்திய அமைச்சர்களை சந்திக்க

## முதல்வர் அடுத்த வாரம் டெல்லி செல்கிறார்

சென்னை

முதல்வர் விஜய் அடுத்த வாரம் டெல்லி சென்று பிரதமர் மோடி, மத்திய அமைச்சர்கள் அமித் ஷா, நிர்மலா சீதாராமன் மற்றும் காங்கிரஸ் கட்சியின் மூத்த தலைவர் சோனியா காந்தி, ராகுல் காந்தி, கார்கே உள்ளிட்ட தலைவர்களை சந்திக்க உள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

தமிழக சட்டப்பேரவைத் தேர்தலில் வெற்றி பெற்று தனிப்பெரும் கட்சியாக தவெக உருவெடுத்துள்ளது. காங்கிரஸ், இந்திய கம்யூனிஸ்ட், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட், விசிக, ஐயூஎம்எல் ஆகிய கட்சிகளின் ஆதரவுடன் கூட்டணி ஆட்சியையும் அமைத்துள்ளது. முதல்வர் விஜய் உள்ளிட்ட 35 பேர் அமைச்சர்களாகப் பதவியேற்றுள்ளனர். காங்கிரஸ், விசிக, ஐயூஎம்எல் ஆகிய கட்சிகளும் அமைச்சரவையில் இடம்பெற்றுள்ளன. நீண்ட காலத்துக்குப் பிறகு, கூட்டணிக் கட்சிகளுக்கு அமைச்சரவையில் தவெக வாய்ப்பு தந்திருப்பது பரவலாக வரவேற்பையும், பாராட்டுகளையும் பெற்றுள்ளது.

இதற்கிடையே, முதல்வராகப் பதவியேற்ற பிறகு, ஸ்டாலின், வைகோ உள்ளிட்ட தலைவர்களை விஜய் சந்தித்து வாழ்த்து பெற்றார். இதன் தொடர்ச்சியாக, டெல்லி சென்று பிரதமர் உள்ளிட்ட தலைவர்களையும் சந்திப்பார் என்ற எதிர்பார்ப்பு எழுந்தது. இந்த சூழலில், கடந்த 15-ம் தேதி புறப்பட்டு 5 நாடுகளில் சுற்றுப் பயணம் மேற்கொண்ட பிரதமர் மோடி, நேற்று முன்தினம் நாடு திரும்பியுள்ளார்.

இந்நிலையில், முதல்வர் விஜய் அடுத்த வாரம் டெல்லி செல்லத் திட்டமிட்டுள்ளார். முதலில் பிரதமர் மோடி, மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷா, நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமன் ஆகியோரைச் சந்திக்க உள்ள விஜய், தமிழகத்துக்கு வர வேண்டிய நிதி, வளர்ச்சித் திட்ட பணிகள் தொடர்பான கோரிக்கைகள் அடங்கிய மனுவை வழங்க உள்ளார்.

தொடர்ந்து, காங்கிரஸ் கட்சியின் மூத்த தலைவர் சோனியா காந்தி, மக்களவை எதிர்க்கட்சி தலைவர் ராகுல் காந்தி, காங்கிரஸ் கட்சித் தலைவர் மல்லிகார்ஜுன கார்கே உள்ளிட்ட தலைவர்களையும் விஜய் சந்திக்க உள்ளார்.

தமிழக அரசின் நிதியுதவியுடன் டெல்லி ஜவஹர்லால் நேரு பல்கலைக்கழகத்தில் நிறுவப்பட்டுள்ள திருவள்ளுவர் சிலையை முதல்வர் விஜய் திறந்து வைப்பார் என்றும் கூறப்படுகிறது.

முதல்வரின் வருகையை முன்னிட்டு, டெல்லியில் உள்ள தமிழ்நாடு அரசு இல்லத்தில் முதல்வர் தங்கும் அறை, ஆலோசனை அரங்கம் ஆகியவற்றை புதுப்பிக்கும் பணிகள் நடந்து வருகின்றன. இப்பணிகளை துரிதப்படுத்த தமிழகத்தில் இருந்து அரசு அதிகாரிகள் விரைவில் டெல்லி செல்கின்றனர். முதல்வராகப் பொறுப்பேற்ற பிறகு முதல்முறையாக டெல்லிக்கு வரும் விஜய்க்கு அரசு சார்பிலும், கட்சி சார்பிலும் சிறப்பான வரவேற்பு அளிக்க திட்டமிடப்பட்டுள்ளது.

**பஹல்காம் தீவிரவாதத் தாக்குதலுக்கான சதி பாகிஸ்தானில் தீட்டப்பட்டது**

# 1,597 பக்க குற்றப்பத்திரிகை தாக்கல்

**உள்ளூர் நபர் அடைக்கலம் அளித்ததும் அம்பலம்**

புதுடெல்லி

பஹல்காம் தீவிரவாத தாக்குதல் தொடர்பாக சிறப்பு நீதிமன்றத்தில் தேசிய புலனாய்வு முகமை (என்ஐஏ) 1,597 பக்க குற்றப்பத்திரிகையை தாக்கல் செய்துள்ளது. 'தாக்குதலுக்கான சதி பாகிஸ்தானில் தீட்டப்பட்டது. உள்ளூர் நபர் அடைக்கலம் அளித்ததால், இந்த தாக்குதல் சாத்தியமானது' என்று அதில் கூறப்பட்டுள்ளது.

காஷ்மீரின் பஹல்காமில் கடந்த ஆண்டு ஏப்ரல் 22-ம் தேதி சுற்றுலா பயணிகள் மீது பாகிஸ்தான் தீவிரவாதிகள் துப்பாக்கியால் சுட்டனர். இதில் 25 சுற்றுலா பயணிகளும், உள்ளூர் நபர் ஒருவரும் சுட்டுக் கொல்லப்பட்டனர். தங்களது மதக் கோட்பாடுகளைத் தெரிவிக்கும் 'கலிமா'வை ஓதச் சொல்லி, பிற மதத்தைச் சேர்ந்த நபர்களை அடையாளம் கண்டு அவர்கள் தாக்குதல் நடத்தினர்.

இந்த தாக்குதலை நடத்திய தீவிரவாதிகள் ஃபைசல் ஜாட் என்கிற சுலைமான் ஷா, ஹபீப் தாஹிர் என்கிற ஜிப்ரான் மற்றும் ஹம்சா ஆப்கானி ஆகியோரை பாதுகாப்பு படையினர் கடந்த ஆண்டு ஜூலை 29-ம் தேதி நடத்திய 'ஆபரேஷன் மகாதேவ்' தேடுதல் வேட்டையில் சுட்டுக் கொன்றனர்.

இந்த தாக்குதல் சம்பவம் குறித்த 1,597 பக்க குற்றப்பத்திரிகையை சிறப்பு நீதிமன்றத்தில் என்ஐஏ தாக்கல் செய்தது. அதில் இந்த தாக்குதலுக்கான சதி பாகிஸ்தானில் தீட்டப்பட்டது எனவும், பஹல்காமில் உள்ள உள்ளூர் நபரின் ஆதரவோடு 3 தீவிரவாதிகள் இந்த தாக்குதலை நடத்தியதும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதில் ஹஃபீஸ் சயீத் தலைமையிலான லஷ்கர் இ தொய்பா, ஹபிபுல்லா மாலிக் தலைமையிலான 'தி ரெசிஸ்டன்ஸ் ஃபிரன்ட் (டிஆர்எப்) ஆகிய அமைப்புகளுக்கு தொடர்பு உள்ளதாக கூறப்பட்டுள்ளது. அதன் விவரம்:

பஹல்காம் தாக்குதலில் ஈடுபட்ட 3 தீவிரவாதிகளும், கடந்த ஆண்டு ஏப்ரல் 21-ம் தேதி மாலை 5 மணிக்கு பைசரன் அருகே உள்ள உள்ளூர்வாசி பர்வைஸ் அகமது என்பவரது குடிசைக்கு துப்பாக்கிகளுடன் வந்தனர். அவர்களை பர்வைஸின் மாமா பஷீர் அகமது ஜோதர் என்பவர் அறிமுகம் செய்து வைத்துள்ளார். பர்வைஸ் உள்ளூரில் குதிரை ஓட்டியாக பணியாற்றுகிறார். விருந்தாளிகளாக வந்துள்ள 3 பேரும் காஷ்மீர் முஸ்லிம்களின் விடுதலைக்காக போராடும் ஜிஹாதிகள் என பர்வைஸிடம் அவரது மாமா கூறினார். 3 தீவிரவாதிகளும் பஞ்சாபி கலந்த உருது மொழியில் பேசினர். இதனால் அவர்கள் காஷ்மீரைச் சேர்ந்தவர்கள் அல்ல; முஜாஹிதீன்கள் என்பதை பர்வைஸ் புரிந்து கொண்டார்.

தீவிரவாதிகள் தாங்கள் கொண்டு வந்த துப்பாக்கிகளை குடிசைக்குள் மறைத்து வைத்தனர். தண்ணீர், தேநீர், இரவு உணவு சாப்பிட்ட பிறகு, சில ரொட்டிகளை பார்சல் செய்து தரும்படி கேட்டனர். இதை பர்வைஸின் மனைவி தாஹிரா தயார் செய்து கொடுத்தார்.

இரவு 10 மணி அளவில் 3 பேரும் புறப்பட்டனர். மறுநாள் காலை அவர்கள் பைசரன் பள்ளத்தாக்குக்கு அருகில் காணப்பட்டனர். பள்ளத்தாக்கு பகுதியில் நுழைவதற்கு முன்பு, ஒரு மரத்தடியில் அமர்ந்து மதிய உணவு சாப்பிட்டனர். மதியம் 2.23 மணி அளவில் தாக்குதலுக்கு புறப்பட்டனர். தங்கள் பையில் இருந்த போர்வையை போர்த்திக் கொண்டனர். அவர்களில் ஒருவர் தனது தலையில் 'கோப்ரோ' என்ற ஆக்சன் கேமராவை அணிந்தபடி, பூங்காவுக்குள் நுழைந்தார்.

ஒருவர் தனது எம்-4 கார்பைன் ரக துப்பாக்கியால் அங்கு கூடியிருந்த சுற்றுலா பயணிகள் மீது சுட்டார். அடுத்த சில நொடிகளில், மற்ற 2 தீவிரவாதிகளும் கடைகள் மற்றும் சரிவுப் பகுதிகளில் இருந்து ஏகே-47 ரக துப்பாக்கிகள் மூலம் சுட்டனர். இதில் 26 பேர் உயிரிழந்தனர். தீவிரவாதிகள் தப்பி ஓடும்போது, அவர்களை பிடிக்க பொதுமக்கள் 3 பேர் முயன்றனர். அவர்களையும் தீவிரவாதிகள் மிக அருகில் வைத்துச் சுட்டுக் கொன்றனர்.

ஒருவரை இடைமறித்து 'கலிமா' ஓதுமாறு தீவிரவாதிகள் கூறினர். அவர் அதை ஓதியதும் அவர்கள் சுடவில்லை. தீவிரவாதிகள் தங்கள் திட்டத்தை வெற்றிகரமாக நிறைவேற்றிய மகிழ்ச்சியை வானில் துப்பாக்கியால் சுட்டு கொண்டாடினர்.

இவ்வாறு குற்றப் பத்திரிகையில் கூறப்பட்டுள்ளது.



பஹல்காம் தாக்குதல் நடந்த பைசரன் பள்ளத்தாக்கு. (கோப்புப் படம்)

**'அவுட்டர் ஹார்பர்' திட்டத்துக்கு ஜூலை மாதத்துக்குள் திட்ட அறிக்கை**

# துறைமுகம் - மதுரவாயல் மேம்பால பணிகள் 2027 நவம்பருக்குள் நிறைவு

**சென்னை துறைமுகத்தின் தலைவர் தகவல்**

சென்னை

துறைமுகம் - மதுரவாயல் இடையேயான மேம்பாலப் பணிகள் 2027 நவம்பர் மாதத்துக்குள் நிறைவடையும் என்று சென்னை துறைமுகத்தின் தலைவர் எஸ்.விஸ்வநாதன், காமராஜர் துறைமுகத்தின் தலைவர் ஜெ.பி.ஐரின் சிந்தியா ஆகியோர் தெரிவித்தனர்.

இது தொடர்பாக சென்னையில் செய்தியாளர்களிடம் அவர்கள் கூறியதாவது:

கடந்த நிதியாண்டில், இரு துறைமுகங்களும் இணைந்து மொத்தமாக 107 மில்லியன் டன் சரக்குகளைக் கையாண்டு புதிய சாதனையை படைத்துள்ளன. இதில் சென்னை துறைமுகம் 57.9 மில்லியன் டன் சரக்குகளையும், காமராஜர் துறைமுகம் 49.08 மில்லியன் டன் சரக்குகளையும் கையாண்டுள்ளன. இரு துறைமுகங்களின் ஒருங்கிணைந்த செயல்பாட்டு வருவாய் ரூ.2,400 கோடியை கடந்துள்ளது. இரு துறைமுகங்களின் மூலதன செலவினமும் ஆயிரம் கோடியாக உயர்ந்துள்ளது.

இதில் சென்னை துறைமுகம் கடந்த நிதியாண்டில் ரூ.1,185 கோடி செயல்பாட்டு வருவாயை ஈட்டியுள்ளதுடன், துறைமுக வரலாற்றிலேயே மிக அதிகபட்சமாக ரூ.434.29 கோடி நிகர உபரி வருவாயை பதிவு செய்துள்ளது. காமராஜர் துறைமுகம் கடந்த நிதியாண்டில் ரூ.1,239 கோடி செயல்பாட்டு வருவாயை ஈட்டியதுடன், நாட்டின் முன்னணி துறைமுகங்களிலேயே மிகக் குறைந்த இயக்க சதவீதமாக 25.48 சதவீதத்தை பதிவு செய்திருக்கிறது. இதேபோல் துறைமுகத்தின் வட்டி, வரி மற்றும் தேய்மானத்துக்கு முந்தைய வருவாய் (எபிட்டா) வரலாற்றிலேயே முதன்முறையாக ஆயிரம் கோடி ரூபாயை கடந்து ரூ.1,071.63 கோடியாக உயர்ந்துள்ளது.

சென்னை துறைமுகத்துக்கு செல்லும் கனரக சரக்கு வாகனங்களுக்காக பிரத்யேகமாக துறைமுகம் - மதுரவாயல் இடையே அமைக்கப்பட்டு வரும் மேம்பாலப் பணிகள் 2027 நவம்பர் மாதத்துக்குள் முழுமையாக நிறைவடைய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

காமராஜர் துறைமுகத்தில் பெரிய கப்பல்களைக் கையாளுவதற்கு ஏதுவாக ரூ.440 கோடி மதிப்பில் 6-வது கட்ட ஆழ்கடல் தூர்வாரும் பணிகள் வெற்றிகரமாக முடிக்கப்பட்டுள்ளன. இதனால் 2.44 லட்சம் டன் சரக்கு கொள்ளளவு கொண்ட மிகப்பெரிய கப்பல்களையும் தற்போது கையாள முடிகிறது. இதற்கிடையே ரூ.10 ஆயிரம் கோடி மதிப்பீட்டில் செயல்படுத்தப்படவுள்ள சென்னை துறைமுகத்தின் 'அவுட்டர் ஹார்பர் ப்ராஜெக்ட்' தொடர்பாக 'ரைட்ஸ்' நிறுவனம் போக்குவரத்து ஆய்வுகளை மேற்கொண்டு வருகிறது.

செங்கடல் பகுதியில் நிலவும் சர்வதேச பதற்றங்கள் மற்றும் ஈரான்-அமெரிக்கா இடையேயான பிரச்சினைகள் காரணமாகக் கச்சா எண்ணெய் இறக்குமதியில் தொடக்கத்தில் சில சவால்கள் இருந்தாலும், தற்போது மாற்று வழிகள் மூலம் அவை சீரமைக்கப்பட்டுவிட்டன. எனினும் இங்கிருந்து வளைகுடா நாடுகளுக்கு அனுப்பப்படும் வாகனங்கள் ஏற்றுமதியில் 6 முதல் 7 லட்சம் டன் வரை பாதிப்பு ஏற்பட்டுள்ளது. இதனை எதிர்கொள்ள ஏற்றுமதியாளர்களுக்குக் கூடுதல் சேமிப்புக் கிடங்கு வசதிகள் மற்றும் கட்டணச் சலுகைகள் வழங்கப்பட்டு வருகின்றன. இவ்வாறு அவர்கள் கூறினர்.

மேகேதாட்டு அணை விவகாரம் குறித்து கருத்து

# கர்நாடக துணை முதல்வருக்கு தலைவர்கள் கண்டனம்

## தமிழக அரசின் நிலைப்பாட்டை தெரிவிக்க வலியுறுத்தல்

சென்னை

'கர்நாடக அரசு மேகேதாட்டு அணை கட்டுவதை எதிர்க்க தமிழகத்துக்கு உரிமை இல்லை' என்று அம்மாநில துணை முதல்வர் டி.கே.சிவக்குமார் தெரிவித்திருப்பதற்கு தமிழக தலைவர்கள் கண்டனம் தெரிவித்துள்ளனர்.

இதுதொடர்பாக அவர்கள் வெளியிட்ட அறிக்கை:

அதிமுக பொதுச்செயலாளர் பழனிசாமி: டெல்டா உள்ளிட்ட பல மாவட்ட விவசாயிகள் மட்டுமின்றி 20 மாவட்ட மக்களின் குடிநீர் ஆதாரமாகவும் காவிரி ஆறு விளங்கி வருகிறது. மேகேதாட்டுவில், காவிரியின் குறுக்கே அணை கட்டினால் டெல்டா மாவட்டங்கள் பாலைவனமாகி விடும். மேகேதாட்டு அணை கட்டுவதை எதிர்க்க தமிழக அரசுக்கு உரிமையில்லை என்ற கர்நாடக துணை முதல்வரின் பேச்சு, தமிழக விவசாயிகள் மற்றும் பொதுமக்களிடையே மிகப் பெரிய கொந்தளிப்பை ஏற்படுத்தியுள்ளது. இவ்விவகாரத்தில் கர்நாடக காங்கிரஸ் அரசுக்கு எதிரான நடவடிக்கைகளை தமிழக அரசு உடனடியாக எடுப்பதுடன், அரசின் தெளிவான நிலைப்பாட்டை அறிவிக்க வேண்டும்.

மதிமுக பொதுச்செயலாளர் வைகோ: நடுவர் மன்றத் தீர்ப்பையும், உச்ச நீதிமன்ற தீர்ப்பையும் கர்நாடக அரசு மீறுவதை அனுமதிக்கக் கூடாது. உச்ச நீதிமன்றத்தில் உள்ள வழக்கை தமிழக அரசு விரைவுபடுத்தி காவிரி உரிமையை நிலைநாட்ட வேண்டும்.

இந்திய கம்யூனிஸ்ட் மாநில செயலாளர் மு.வீரபாண்டியன்: மேகேதாட்டு அணை கட்ட புதிய விரிவான திட்டம் மத்திய அரசிடம் வழங்கப்படும் என கர்நாடக துணை முதல்வர் தெரிவித்துள்ளார். இத்தகைய முயற்சியை கர்நாடக மாநிலம் உடனடியாகக் கைவிட வேண்டும். மேகேதாட்டு அணைத் திட்டத்துக்கு மத்திய அரசு அனுமதி வழங்கக்கூடாது.

பாமக தலைவர் அன்புமணி: மேகேதாட்டு அணை குறித்து கர்நாடக அரசு புதிதாக தயாரித்திருக்கும் திட்ட அறிக்கையை மத்திய நீர்வள அமைச்சகம் பெற்றுக்கொள்ளக் கூடாது. அது மட்டுமின்றி, காவிரியின் குறுக்கே மேகதாது அணை கட்டுவதற்கான வரைவு திட்ட அறிக்கை தயாரிக்க 2018-ம் ஆண்டில் அளித்த அனுமதியை ரத்து செய்யும்படி மத்திய அரசுக்கு தமிழக அரசு அழுத்தம் தர வேண்டும்.

அமமுக பொதுச் செயலாளர் டிடிவி தினகரன்: காவிரியின் குறுக்கே மேகேதாட்டு அணையைக் கட்டி தமிழகத்தின் டெல்டா பகுதிகளைப் பாலைவனமாக்கும் கர்நாடக காங்கிரஸ் அரசின் முயற்சியை ஆரம்ப நிலையிலேயே முதல்வர் விழிப்புடன் தடுத்து நிறுத்த வேண்டும்.

தமாகா தலைவர் ஜி.கே. வாசன்: தமிழக அரசு உடனடியாக கர்நாடக காங்கிரஸ் அரசோடு கண்டிப்போடு பேசி மேகேதாட்டுவில் அணை கட்ட முயற்சிக்கக் கூடாது என்பதை உறுதிபடத் தெரிவிக்க வேண்டும்.

இவ்வாறு அவர்கள் கூறியுள்ளனர்.

# குறைந்து வரும் வரதட்சணைக் கொடுமை மரணங்கள்

## 90 நிமிடங்களுக்கு ஒரு பெண் உயிரிழப்பு

புதுடெல்லி

மத்தியப் பிரதேச மாநிலம் போபாலில் ட்விஷா சர்மா என்பவரும், கிரேட்டர் நொய்டாவில் தீபிகா நகர் என்பவரும் அண்மையில் அடுத்தடுத்து மரணம் அடைந்த சம்பவங்கள், இந்தியாவில் இன்னும் தொடர்ந்து வரும் வரதட்சணைக் கொடுமைகளை எடுத்துக்காட்டின.

இவை ஏதோ தற்செயலாக நடந்த தனிப்பட்ட சம்பவங்கள் அல்ல, பல ஆண்டுகளாகத் தொடரும் அவலமான பின்னணியின் ஒரு பகுதியே என்றும் அதிகாரப்பூர்வத் தரவுகள் நமக்கு வெளிப்படுத்துகின்றன. தேசிய குற்ற ஆவணக் காப்பகம் (என்சிஆர்பி) வெளியிட்டுள்ள தரவுகளின்படி, கடந்த 2024-ம் ஆண்டில் மட்டும் இந்தியாவில் 5,737 வரதட்சணை மரணங்கள் பதிவாகியுள்ளன.

இது முந்தைய ஆண்டுகளுடன் ஒப்பிடுகையில் சற்றே சரிவைக் காட்டினாலும், இப்பிரச்சினையின் தீவிரத்தை உணர்த்துவதற்கு இந்த எண்ணிக்கையே போதுமானதாக உள்ளது.

கடந்த பத்தாண்டு காலத் தரவுகளை உற்றுநோக்கினால், வரதட்சணை மரணங்களின் எண்ணிக்கை படிப்படியாகக் குறைந்து வருகிறது. 2015-ம் ஆண்டில் 7,634 ஆக இருந்த மரணங்களின் எண்ணிக்கை, 2024-ல் 5,737 ஆகக் குறைந்துள்ளது.

இந்த பத்தாண்டுகளில் 1,900 மரணங்கள் குறைந்துள்ள நிலை சற்றே ஆறுதல் அளித்தாலும், தற்போதைய புள்ளி விவரங்களின்படி நாட்டில் நாளொன்றுக்கு சராசரியாக 15-க்கும் மேற்பட்ட பெண்கள் வரதட்சணைக் கொடுமையால் உயிரிழப்பது வெளிச்சத்திற்கு வந்துள்ளது.

அதாவது, ஒவ்வொரு 90 நிமிடத்துக்கும் ஒரு பெண் வரதட்சணை கொடுமையால் உயிரிழக்கிறார். இது இந்த சமூக அவலம் இன்னும் வீரியத்துடனேயே நீடிக்கிறது என்பதை இது உணர்த்துவதாக அமைந்து உள்ளது. வரதட்சணைக் கொடுமை மரணங்களைப் பொருத்துவரையில் நாடு முழுவதும் சீராக இல்லை; மாறாக, குறிப்பிட்ட சில மாநிலங்களிலேயே மிக அதிக அளவில் பதிவாகியுள்ளன.

குறிப்பாக, உத்தர பிரதேச மாநிலத்தில் மட்டும் கடந்த 2024-ல் 2,038 மரணங்கள் பதிவாகியுள்ளன. இது நாட்டின் ஒட்டுமொத்த வரதட்சணை மரணங்களில் மூன்றில் ஒரு பங்கிற்கும் அதிகமாகும்.

இதற்கு அடுத்தபடியாக பிகாரில் 1,078 மரணங்களும், மத்தியப் பிரதேசத்தில் 450 மரணங்களும் பதிவாகியுள்ளன. ராஜஸ்தான் (386), மேற்கு வங்கம் (337) ஆகிய மாநிலங்களும் இந்த வரிசையில் முன்னிலையில் உள்ளன.

குறிப்பிட்ட சில மாநிலங்களில் மட்டும் இந்த வழக்குகள் அதிகளவில் குவிந்திருப்பது, அங்கு வரதட்சணைக் கொடுமை என்பது இன்னும் சமூகத்தில் ஆழமாக வேரூன்றியிருப்பதைக் காட்டுகிறது.

வரதட்சணைக் கொடுமையால் ஏற்படும் மரணங்களில், மன உளைச்சல் மற்றும் சித்திரவதை காரணமாக நிகழும் தற்கொலைகளும், பிற சந்தேகத்திற்குரிய மரணங்களும் அடங்கும்.

அதே வேளையில், வரதட்சணைப் கொலைகள் எனப்படும் நேரடி வன்முறை மரணங்களையும் தேசிய குற்ற ஆவணக்காப்பகத் தரவுகள் அப்பட்டமாக்கியுள்ளன. அதன்படி, 2024-ல் மேற்கு வங்கத்தில் 163 படுகொலைகளும், ஒடிசாவில் 161 படுகொலைகளும் நிகழ்ந்துள்ளன.

ராஜஸ்தானில் 75, பிகாரில் 66 மற்றும் உத்தர பிரதேசத்தில் 58 சம்பவங்கள் பதிவாகியுள்ளன. வரதட்சணைத் தகராறுகள் எவ்வாறு ஒரு பெண்ணின் நேரடிப் படுகொலையில் முடிகின்றன என்பதற்கு இந்த எண்களே சாட்சியாக உள்ளன.